# பொது விநியோக முறை

**(இனம் - 28)**

01. இன்றியமையாப் பொருட்கள் எளிதில் கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்தவும், வாங்கத்தக்க விலைகளில் அத்தகையப் பொருட்களைப் பெறுவதில் சமுதாயத்தில் நலிந்த பிரிவினருக்கு ஏற்பட்டுள்ள துயரைப் போக்கவும், பொதுப் பகிர்வு முறையைத் திறம்படவும், தடங்கலின்றியும் செயல்படுத்த அரசு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. பொது விநியோக முறையானது எல்லோரது தேவைகளையும் அவர்களின் எதிர்பார்ப்புகளையும், விருப்பங்களையும் நிறைவு செய்வதாக இருக்கவேண்டும்.

02. பொது விநியோக முறையானது பொருட்கள் எப்போதும் கிடைக்கக்கூடிய தன்மை, எளிதில் பெறக்கூடிய தன்மை ஏற்றுக்கொள்ளக்கூடிய தரம், வாங்க இயலக்கூடிய தன்மை ஆகிய நான்கு காரணக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. இம்மாநிலத்தில் பொது விநியோக முறையின் விரிவான அமைப்புப் பணியில் 22,959 நியாய விலைக் கடைகள் செயல்படுகின்றன. அவற்றில் 17,206 கடைகள் ஊரகப் பகுதிகளிலும், 5753 கடைகள் நகர்ப்புறங்களிலும் இருக்கின்றன. 21,881 கடைகள் கூட்டுறவுச் சங்கங்களாலும், நகர்ப்புறங்களில் 1078 கடைகள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும் நடத்தப்படுகின்றன. வருவாய் கிராமம் ஒவ்வொன்றிலும் குறைந்தது ஒரு நியாய விலைக் கடை உள்ளது. மாநில அரசின் அளவுகோளின்படி வளம்பெறத்தக்கதொரு நியாய விலைக் கடையானது குறைந்தது 800 குடும்ப அட்டைகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். இருப்பினும், நெடுந்தொலைவிலுள்ள பகுதிகளில் வசிக்கும் குடும்ப அட்டை தாரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு 15,000–க்கு மேற்பட்ட கடைகள் ஒவ்வொன்றும் 800–க்கும் குறைவான குடும்ப அட்டைகளுடன் செயல்படுகின்றன. இதனால் ஏற்படும் இழப்பினை அரசும், தொடர்புடைய கூட்டுறவுச் சங்கங்களும் பகிர்ந்து கொள்கின்றன.

03 மேற்கூறிய விரிவான அமைப்புப் பணிகள் தவிர, இரு கடைகளுக்கிடைய உள்ள தொலைவு 3 கிலோ மீட்டருக்கும் கூடுதலாக இருக்குமிடங்களில், பகுதி நேர நியாயவிலைக் கடை ஒன்றினைத் திறக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுமதி வழங்கும் அதிகாரத்தினை கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு அரசு வழங்கியுள்ளது. அவ்வாறு பகுதிநேரக் கடை ஒன்றினைத் திறப்பதற்கு அக்கடை நடத்துவதற்கான கட்டிடத்தை வாடகையின்றி பெற வேண்டும். மேலும், இக்கடைக்காகத் தனியாக விற்பனையாளரை நியமிக்கக்கூடாது. அருகில் இருக்கும் கடையில் உள்ள விற்பனையாளரே இப்பகுதி நேரக் கடையையும் கவனித்துக் கொள்வார். இம்முறையில் 1,783 பகுதி நேரக் கடைகள் மாநிலத்தில் தற்போது செயல்படுகின்றன.

04. அணுகமுடியாத மலைப்பகுதிகளிலும் மற்றும் தொலைதூரத்திலும் வசிக்கும் பொதுமக்களுக்குச் சேவை செய்யும் பொருட்டு 30 நடமாடும் நியாய விலைக் கடைகள் கீழ்காணும் மாவட்டங்களில் செயல்படுகின்றன. திருநெல்வேலி கட்டபொம்மன் (2), திண்டுக்கல் அண்ணா (2), வட ஆற்காடு அம்பேத்துகர் (3), பெரியார் (2), நீலகிரி (6), திருச்சிராப்பள்ளி (1), சேலம் (5), தருமபுரி (1), கோயம்புத்தூர் (5), திருவண்ணாமலை சம்புவராயர் (1), விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் (2). முன்னோடி திட்டமாக, தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் தானே முன்வந்து பகிர்ந்தளிக்கும் ஏற்பாடு ஒன்றினை அரசு தொடங்கியுள்ளது. இதன்படி, பொது விநியோக முறையின் கீழ் பொருட்களைப் பகிர்ந்தளிக்கும் சில்லறைக் கடைகள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ்ப்பணியாற்றும் மகளிர் அல்லது கிராமப்பகுதிகளில் மகளிர் – குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டங்களின் கீழ் மகளிரால் தொடங்கப்பட்டுள்ளது. 31.5.96 – ஆம் நாள் நிலவரப்படி இத்தகைய 135 துணை சில்லறை விற்பனைக்கடைகள் இயங்கி வருகின்றன. செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் (5), வட ஆற்காடு அம்பேத்துகர் (12), திருவண்ணாமலை சம்புவராயர் (10), தருமபுரி (10), சேலம் (8), பெரியார் (1), நீலகிரி (4), தென்னாற்காடு வள்ளலார் (4), விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் (7), நாகப்பட்டினம் காயிதேமில்லத்து (10), திருச்சிராப்பள்ளி (8), புதுக்கோட்டை (5), மதுரை (21), இராமநாதபுரம் (6), காமராஜர் (2), பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் (4), திருநெல்வேலி கட்டபொம்மன் (8), கன்னியாகுமரி (10).

05. அரிசி. கோதுமை. மைதா. ரவை, சர்க்கரை, மண்ணெண்ணெய் போன்ற இன்றியமையாப் பொருட்கள், குடும்ப அட்டை வைத்திருப்பவர்களுக்குப் பொது விநியோக முறையின் கீழ் முறையாக வழங்கப்படுகின்றன. மாநில அரசுக்கு மத்திய அரசு பாமாலின் ஒதுக்கீடு செய்யும்போதெல்லாம் பொது மக்களுக்கு பாமாலின் வழங்கப்படுகிறது.

06. பொது விநியோக முறை இயங்குவதில் உள்ள நான்கு நிலைகள் பின்வருமாறு :

(அ) சட்டப்படியான செய்கடமைகள் (உணவுப் பொருள் வழங்கல் ஆணையரால் செயலாக்கப்படுகின்றன) ;

(ஆ) மொத்த விற்பனை செய்கடமைகள் (தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் செயலாக்கப்படுகின்றன) ;

(இ) சில்லறை விற்பனைச் செய்கடமைகள் (கூட்டுறவுச் சங்கங்களாலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும் செயலாக்கப்படுகின்றன) ;

(ஈ) சட்டப்படி அல்லாத கண்காணிப்பு / மேற்பார்வை செய்கடமைகள் (மாவட்ட ஆட்சியர்களால் அமைக்கப்பட்ட உள்ளூர் குழுக்களால் செயலாக்கப் படுகின்றன).

இந்திய அரசமைப்புச்சட்டத்தின் 73, 74 ஆவது திருத்தங்களில் 11/12 ஆம் விவர அட்டவணைகளின் கீழ் சொல்லியுள்ளவாறு, பொது விநியோக முறையில் அதிகாரங்களைக் கிராமப்பகுதிகளுக்கும், நகர்ப்பகுதிகளுக்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பிரித்துக் கொடுப்பது குறித்து அரசு கருதிப்பார்த்து. சட்டப்படி அல்லாத கண்காணிப்புச் செய்கடமையை மட்டும் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்க இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. கிராமப்பகுதியிலுள்ள பெரும்பான்மையான கடைகள் இழப்பில் இயங்குகின்றன. இதற்கு அரசு உதவித்தொகை கிடைக்கிறது என்றாலும் பல நேரங்களில், பல ஆண்டுகளுக்குப் பின்னரே இவ்வுதவித்தொகையானது சில நேரங்களில் வழங்கப்படுகிறது. மேலும், வங்கிகளிடமிருந்து ரொக்கக் கடனுதவி பெற்ற வணிக நடவடிக்கையாகவே இக்கடைகள் இயங்கி வருகின்றன. சட்டப்படியான செய்கடமைகள் மற்றும் மொத்த விற்பனை தொடர்பான செய்கடமைகள், உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத் திறனுக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகள் என்று அரசு கருதுகிறது. எனவே, சட்டப்படி அல்லாத கண்காணிப்பு / மேற்பார்வைப் பணிகளை மட்டும் உள்ளாட்சி அமைப்புகளிடம் பிரித்துக் கொடுக்க குறிப்பான அரசாணை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. (அரசாணை எண் 84, கூட்டுறவு. உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, (ஊ1) நாள் 4.4.96.

07. பொது விநியோக முறையினை சீரமைத்துத் திறம்படவும் சிக்கனத்துடனும் செயற்படுத்த மாநில அரசு குழு ஒன்றினை அமைத்துள்ளது. குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. வறுமைக்கோட்டிற்கு கீழே வாழும் மக்களை இலக்காகக்கொண்டு பொது விநியோக முறையைச் சீரமைக்க மத்திய அரசு கருதியுள்ளது. வறுமைக்கோட்டிற்கு கீழே வாழும் மக்களையும் மற்றும் ஏனைய மக்களையும் இரு பிரிவாகக் கருதி இரண்டுவித விலைகளில் விநியோக முறையில் பொருட்களை வழங்கவும் அரசு கருதி வருகின்றது. குறிப்பிட்ட பிரிவினரை இலக்காகவும் மற்றும் இருவித விலைகளும் திருத்திய கொள்கையாக அரசு அறிவிக்கும் நேரத்தில், குறிப்பிட்ட பிரிவினர்களை பகுப்பாய்ந்து அறிவது தேவையான ஒன்றாகும்.

08. மாநில திட்டக்குழு பிரிவின் நோக்கில் பொதுப் பகிர்வு முறையின் செயல்பாடு ஒரு பொருளாதார நடவடிக்கை என்பதால், அதே வேலைகளைக் கையாலும் அமைப்புகள் சிறப்பாக செய்ய முடியும். சேவை நோக்கோடு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஊராட்சிகள், சமூக அரசியல் அமைப்புகளாகும். கூட்டுறவுச் சங்கங்கள் ஊராட்சிகளைப் போல மக்களாட்சி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட சபையாகும். ஊராட்சிகளைப் போல் அல்லாமல் கூட்டுறவுச் சங்கங்கள் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. பெரிய அளவிலும், நெடுங்காலமாகவும் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் நியாய விலைக் கடைகளை நடத்தி வருகின்றன. இவ்விதமாக, அதன் நிகரப்பயனானது, மாநில திட்டக்குழு பிரிவின் கருத்தில் கூட்டுறவுச் சங்கங்களுடான இப்போதைய ஏற்பாடுகளைத் தொடர வேண்டும் என்றுள்ளது.

9. இருந்தபோதிலும், பொது விநியோக முறையானது அனைவருக்கும் வாய்ப்பளிக்கத் தக்கவாறு இருக்க வேண்டும். இயங்கும் ஆற்றலுடையதாகவும், தெளிவாகத் தெரிகின்றதாகவும் அது இருக்க வேண்டும். ஊராட்சி அமைப்புகள் நேரடியாகவும், குடும்ப அமைப்புகளையும் அவர்களுக்குரிய இன்றியமையாப் பொருள்களின் தேவைகளையும் மிகவும் அறிந்ததாய் இருக்க வேண்டும். ஆகையால், மேலே சொல்லப்பட்ட நோக்கங்களை எய்தவும், அதன் செயற்பாட்டில் உள்ள நேர்மையில் பொதுமக்களின் தன்னம்பிக்கையானது மேம்படவும் பொது விநியோக முறையானது செயலாக்கமுடைய ஊராட்சி அமைப்புகளுடன் இணைக்கப்படுதல் வேண்டும். இத்தேவையில் கவனம் செலுத்தி, இம்மாநிலத்தில் உள்ள பொது விநியோக முறையின் தகுநிலையினையும், இப்பொருண்மை குறித்த சட்டஞ்சார்ந்த வழிவகைகளையும் கருத்திற்கொண்டு ஆய்ந்ததில் பின்வரும் அதிகாரங்களையும் பொறுப்புகளையும் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு முறைப்படி உரிமையாக்கலாமென மாநிலத் திட்டக்குழு பிரிவு கருத்துரை அளிக்கின்றது.

## I. ஊராட்சி

| | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1. | பொது விநியோக முறைக்கான இலக்குத் தொகுதியை அடையாளம் காணல். | (அ) அரசு அறுதியிட்ட அளவுகோளின்படி வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பத் தினரைக் கண்டறிந்து, அப்பட்டியலைப் பெற்று கிராம சபையால் அதற்கு உரியவாறு ஏற்பளித்தல் / பின்னேற்பு அளித்தல். |
| 2. | பொது விநியோக முறைத் திட்டத்தின் கீழ் எளிதில் கிடைக்கும் தன்மை மற்றும் இன்றியமையாப் பொருள்களின் நடமாட்டம், தேவை ஆகியவற்றை மதிப்பிடுதல். | (அ) பொருள்களின் இருப்பு விவரம், விலை விவரம், விநியோக அளவு (மாதத்திற்கு ஒருவருக்கு), பொருள்கள் வழங்கக் கூடிய காலங்கள் போன்ற விவரங்களை மக்கள் அறியும் வண்ணம் தெரியப்படுத்துதல். |
| | | (ஆ) இன்றியமையாப் பொருள்கள் எப்போதும் கிடைக்கச் செய்யவும் அதனை கொண்டு செல்வதில் ஆய்வு செய்து ஒருங்கிணைத்தல். பொருட்களின் கூடுதல் தேவையை உள்ளூர் மக்களின் தேவைக்கேற்ப கண்டு உரிய அதிகாரிகளிடம் தெரிவித்தல். |
| 3. | நியாய விலைக்கடைகளை நடத்துதல் மற்றும் பராமரித்தல் | (அ) ஊராட்சிகள் முன் வரும் போதெல்லாம் பகுதிநேர நியாய விலைக் கடைகளை நடத்துதல் மற்றும் பராமரித்தல். |
| | | (ஆ) புதிய நியாய விலைக்கடைகள் அமைக்க உள்ள பகுதியைத் தேர்ந் தெடுக்க உதவுதல். |
| 4. | போக்குவரத்து, சேமித்து வைத்தல் மற்றும் விநியோக முறை | (அ) புதிய குடும்ப அட்டைகள் வழங்க உதவுதல் ; போலி குடும்ப அட்டைகளை அடையாளங் கண்டு அதனை ஒழித்தல். |
| 5. | பொது மக்கள் நம்பிக்கையை உயர்த்துதல் மற்றும் குறைதீர்த்தல் | (அ) கிராம அளவில் பொதுப் பகிர்வு முறை விசாரணைக் குழு அமைத்தல், நியாய விலைக்கடைகளை சோதனை செய்தல், ஒழுங்கீனங்களையும் முறை கேடுகளையும் வட்டார வழங்கல் அலுவலகம் மற்றும் ஊராட்சி ஒன்றியத்திடம் அறிவித்தல். |

| | | |
|---|---|---|
| 6. | வறுமையை நீக்கும் திட்டங்களுடன் பொது விநியோக முறையை தொடர்பு படுத்துதல் (ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், தீவிரமான ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், வேலை உறுதித் திட்டம் முதலியன) | (அ) தேவைப்படும் உணவு தானியங்களின் அளவினை மதிப்பிட உதவுதல். |
| | | (ஆ) உணவு தானியங்களை பயனடைவோர் களுக்கு பிரித்து வழங்க உதவுதல். |
| | | (இ) பயனடைவோர்களுக்கு பிரித்து அளிக்க வேண்டிய உணவு தானியங்களின் அளவினையும், தரத்தையும் கவனித்து கொள்ளுதல். |
| | | (ஈ) ஒழுங்கீனங்களையும், முறைகேடு களையும் கண்டுபிடித்தால் அதனை சரி செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுத்தல். |
| 7. | நுகர்வோர் பாதுகாப்பும் கல்வியும் | (அ) நுகர்வோர் உரிமைகளைப் பற்றி அச்சிட்ட வெளியீடுகளை வழங்குதல் மற்றும் காட்சிக்கு வைத்தல். |

## II. ஊராட்சி ஒன்றியம்

| | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1. | பொது விநியோக முறைக்கான இலக்குத் தொகுதியை அடையாளம் காணல். | (அ) ஊராட்சியின் பணியான வறுமை கோட்டின் கீழ் வாழும் மக்களை அடையாளம் காணுவதில் வழி காட்டியாகவும் ஒருங்கிணைப்பு பணியும் புரிதல். |
| 2. | பொது விநியோக முறைத் திட்டத்தின் கீழ் எளிதில் கிடைக்ககூடிய தன்மை மற்றும் இன்றியமையாப் பொருள்களின் நடமாட்டம், தேவை ஆகியவற்றை மதிப்பிடுதல். | (அ) இன்றியமையாப் பொருட்களை கொண்டு செல்லுதல் மற்றும் அதனை ஊராட்சி ஒன்றியப் பகுதியில் எப்போதும் கிடைக்கச் செய்வதற்கும் கண்காணிப்பதற்கும் உதவி செய்தல். |
| | | (ஆ) ஊராட்சிகளுக்குத் தேவையான இன்றியமையாப் பொருட்களை உறுதிப் படுத்துதல் வேண்டும். அப்பொருட்கள் கிடைத்திடவும் மற்றும் அதனை கொண்டு செல்ல அதற்குரிய அதிகாரிகளை கண்டு பின்பற்றுதல். |
| 3. | நியாய விலைக்கடைகளை நடத்துதல் மற்றும் பராமரித்தல் | ஒன்றும் இல்லை |
| 4. | போக்குவரத்து, சேமித்து வைத்தல் மற்றும் விநியோக முறை | (அ) புதிய நியாய விலைக்கடைகளை இதன் அதிகார எல்லையில் திறக்க ஒருங்கிணைப்பு நல்கி உதவுதல். |
| | | (ஆ) சேமிப்பு கிடங்குகளை நிறுவுவதற்கு உரிய இடத்தினையும் அதற்குரிய நிலத்தினையும் தேர்தெடுக்க உதவுதல். |

| | | |
|---|---|---|
| | | (இ) ஊராட்சிகள் புதிய குடும்ப அட்டை வழங்குவதற்கும் மற்றும் போலி குடும்ப அட்டைகளை நீக்கவும் வழிகாட்டுதல். |
| 5. | பொது மக்கள் நம்பிக்கையை உயர்த்துதல் மற்றும் அவர்களின் மனக்குறையைத் தீர்த்தல் | (அ) நிர்ணயிக்கப்பட்ட கொள்கையின்படி பொதுப் பகிர்வு முறை சுமூகமாக நடைபெறுகின்றதா என்பதை குறிப்பிட்ட காலங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்வதற்கு பொது விநியோக முறைக் குழு அமைத்தல், ஊராட்சி ஒன்றியத்திற்கு பொது விநியோக முறை சம்பந்த மாக வழங்கும் பொருள்களின் விவரங் களை வட்டார வழங்கல் அலுவலகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் பிற அலுவலகங்கள் கொடுக்கும். |
| | | (ஆ) குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை ஊராட்சி மூலம் பெறும் அறிக்கையை ஆய்வு செய்து அதன் மேல் நடவடிக்கை எடுத்தல். |
| 6. | வறுமையை நீக்கும் திட்டங்களுடன் பொது விநியோக முறையை தொடர்பு படுத்துதல் (ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், தீவிரமான ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், வேலை உறுதித் திட்டம் முதலியன) | (அ) ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், தீவிரமான ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், வேலை உறுதித் திட்டம் முதலியன திட்டங்களுக்கு கூலியின் ஒரு பகுதியாக வழங்கக்கூடிய உணவு தானியங்களின் தேவை விவரங்களைக் ஊராட்சிகளிடம் இருந்து சேகரித்தல். |
| | | (ஆ) ஊராட்சிகளுக்குத் தேவையான அளவில் உணவு தானியங்களை வழங்கல் மற்றும் பங்கீடு செய்தலை உறுதிப் படுத்துதல். |
| | | (இ) பயனடைவோர்களுக்கு கொடுக்கக் கூடிய உணவு தானியங்களைக் கொண்டு செல்லுதல் மற்றும் பங்கீடு செய்வதைக் கண்காணித்தல். |
| 7. | நுகர்வோர் பாதுகாப்பும் கல்வியும் | (அ) நுகர்வோர் உரிமைகளை ஊக்குவிக்கும் பணியில் ஊராட்சிகளுக்கு உதவி செய்தல். |

## III. மாவட்ட ஊராட்சி

| | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1. | பொது விநியோக முறை திட்டத்தின் கீழ் இன்றியமையாப் பொருள்கள் எளிதில் கிடைக்கச் செய்தலும், நடமாட்டமும், தேவையை மதிப்பிடுதலும், நியாய விலைக் கடைகளை நடத்துதலும் பராமரித்தலும், போக்குவரத்து, சேமித்து வைத்தல் மற்றும் வழங்கு முறை, பொதுமக்களின் | (அ) மாவட்டத்தில் உணவுப் பொருள்களை வழங்குதல், எளிதில் கிடைத்திடல், பகிர்வு போன்ற ஏற்பாடுகளை மறு ஆய்வு செய்தல்.<br>(ஆ) இருப்பு வைத்தல், போக்குவரத்து வசதிகள் உள்ளிட்டப் பொதுப் பகிர்வு முறையின் செயற்பாடுகளை மறு |

| | | |
|---|---|---|
| | நம்பிக்கையை உயர்த்துதலும் மனக்குறையைப் போக்குவதும், வறுமையை நீக்கும் திட்டங்களுடன் பொதுப் பகிர்வு முறையைச் சேர்த்தல் | ஆய்வு செய்தல். |
| | | (இ) ஊராட்சி ஒன்றியங்கள் அளிக்கும் அறிக்கைகளின் அடிப்படையில் நியாய விலைக்கடைகளில் இன்றியமையாப் பொருள்கள் எளிதில் கிடைக்கச் செய்தலை மாவட்ட வழங்கு அலுவலர், கூட்டுறவுச் சங்க இணைப் பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து மாவட்டங்களுக்குள் உள்ள நியாய விலைக் கடைகளுக்கு இன்றியமையாப் பொருள்கள் எளிதில் செல்லுவதை உறுதி செய்தல். |
| | | (ஈ) நுகர்வோரின் உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதற்காக மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுவுடன் தொடர்வு ஏற்படுத்திக் கொள்ளுதல். |
| 2 | உள்ளூர் உணவு தானிய உற்பத்தியின் மதிப்பை உயர்த்த நீண்ட காலத் திட்டமிடலும் மாவட்ட அளவிலான உணவைப் பாதுகாத்தலை உறுதிப்படுத்துதலும். | (அ) மாவட்டத்தில் பற்றாக்குறையை விஞ்சி உணவு தானிய உற்பத்தியை மேம்படுத்துவதற்கான திட்டங்களை உருவாக்குதல் மற்றும் செயல் படுத்துதல். |
| | | (ஆ) பொது உரிமை நலக்குழுவால் உணவு தானியங்களை கையிருப்பில் வைத்துக் கொள்வதற்கான திட்டங் களை உருவாக்குதல். |

**நிருவாகச் சிக்கல்கள் :**

10. உணவு தானியங்களை உரிய நேரத்திலும், செயலாக்கமுடனும் பயனுறுதிபுடனும் எடுத்துச் செல்லவும், இருப்பு வைக்கவும், பகிர்ந்தளிக்கவும் தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகம், மாவட்ட வழங்கு அலுவலகங்கள் மற்றும் தமிழ்நாடு பண்டசாலைக் கழகம் ஆகியவற்றுடன் மாவட்ட ஊராட்சிகள் சிறந்த தொடர்பினை கூட்டுறவு அமைப்புகள் வளர்த்துக் கொள்வது தேவையானதாகும். ஊராட்சி ஒன்றிய அளவில், இதுபோன்ற ஒருங்கிணைப்பினை வட்ட வழங்கு அலுவலருடனும் பிற முகமைகளின் பணித் துறையைச் சார்ந்தவர்களுடனும் பொது விநியோக முறை தடங்களின்றி செயற்படுவதை உறுதிப்படுத்த வேண்டியதும் தேவையானதாகும். ஊராட்சி அளவில், பகுதி நேர நியாய விலைக் கடை களை நடத்திட ஒருவர் கூட இல்லாது இருக்கின்ற அத்தகைய நியாய விலைக் கடைகளைக் ஊராட்சிக்கு மாற்றம் செய்வதும் தேவையானதாகும். அதுபோன்ற நேர்வுகளில் கூட்டுறவு முன்னிலைப் பாட்டினைத் திரும்பப் பெற்றுக் கொள்வது பொருத்தமானதாகும். ஊராட்சியானது அதன் பணியாளரையும் அவ்விடத்தில் அமர்த்திக் கொள்ளலாம். ஆகையினால், கூட்டுறவு அமைப்புகளால் செயற்படுத்தப்பட்டு வரும் பகுதி நேரக் கடைகளை **(1783)** ஊராட்சிகள், அவர்கள் முன்வருவாரேயாயின், எடுத்துக் கொள்ளலாம். பகுதி நேரக் கடைகளுக்குக் கூட்டுறவு அமைப்புகள் தனிப்பட்ட விற்பனையாளர்களை அமர்த்திக் கொள்ள இயலாதென்பதால், அத்தகைய கடையை இயக்கும் ஊராட்சிக்கு நிர்வாக வசதிக் குறைவுகளை ஏற்படுத்தாது என்பதுடன் எளிதில் அணுகத்தக்க தன்மையினையும் மேம்படுத்தும்.

11. பொது மக்கள் நம்பிக்கையை மனதில் பதியச் செய்யும் வகையிலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சேமிப்பு கிடங்கில் இருந்து நியாய விலைக்கடைகளுக்கு பொருட்கள் கொண்டு செல்லும் பொழுது ஏற்படக்கூடிய ஒழுக்குகளைத் தவிர்க்கவும், நண்பகல் உணவு மையங்களில் இப்போது செய்யப்படுவதனைப் போன்று

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், திங்கள் தேவை பட்டியைப் பெற்றும், ஏற்புடைய போக்குவரத்து வழித்தடங்களை மேம்படுத்தியும், நியாய விலைக் கடைகளில் பொருள்களை வழங்க வேண்டுமெனக் கருத்துரைக்கப் பெறுகிறது.

12. மத்திய அரசு பொறுப்பேற்றுப் பங்கு கொள்ளும் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், தீவிர ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், வேலை உறுதி அளிக்கும் திட்டம் மற்றும் இதனைப் போன்ற பிற வேலை வாய்ப்புப் பெருக்க திட்டம் ஆகியவற்றின் கீழ் தொழிலாளர்களின் கூலியில் ஒரு பகுதியாக உணவு தானியங்கள் வழங்கப்படுவது அடிப்படையான ஆக்கக்கூறாகும். இத்தகைய வேலை வாய்ப்புப் பெருக்க திட்டங்களை ஊராட்சி அமைப்புகள் நிறைவேற்றுவதற்குரியதாகும். இந்த விதமாக, உள்ளூர் நியாய விலைக் கடைகளில் இருந்து உணவு தானியங்களை தொழிலாளர்களுக்கு வழங்க ஊராட்சிகள் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

## நிதிச் சிக்கல்கள்

13. கூட்டுறவு சங்கங்களால் நடத்தப் பெறும், நட்டத்தில் இயங்கும் கிராம நியாய விலைக் கடைகளுக்கும், நகர்ப்புற நியாய விலைக் கடைகளுக்கும் ஊக்குதவித் தொகை அளிக்க அரசு ஒப்பளிப்புச் செய்கின்றது. **1994 –95** ஆம் ஆண்டுக்காக, கிராம நியாய விலைக் கடைகளுக்காக ஊக்குதவித் தொகையாக ரூ.**7.13** கோடி ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. **1995 –96** ஆம் ஆண்டின் போது **1991 –92** முதல் **1993 –94** ஆம் ஆண்டுகளுக்காக ஊரக நியாய விலைக் கடைகளுக்காகவும், **1990–91** முதல் **1994–95** ஆம் ஆண்டுகளுக்காக நகர்ப்புற நியாய விலைக் கடைகளுக்காகவும் ஊக்குதவி நிலுவைத் தொகையாக ரூ.**15** கோடியை அரசு விடுவித்துள்ளது. **1995–96** ஆம் ஆண்டுக்கான ரூ.**11.07** கோடி ஊக்குதவித் தொகையை ஒப்பளிப்புச் செய்வதற்கான கருத்துரு அரசின் தீவிர ஆய்வில் உள்ளது. இப்பகுதி நேர நியாய விலைக் கடைகள் ஊராட்சிகளுக்கு மாற்றப்படும் போது, கூட்டுறவு அமைப்புகளுக்கு இப்போது அனுமதிக்கப்படும் ஊக்குதவிகள்ள ஊராட்சிகளுக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

14. கூட்டுறவு அமைப்புகள் மற்றும் மாநகராட்சிகள் ஆகியவை வாயிலாக இன்றியமையாப் பொருள்களை உரியவாறு விற்பனை செய்ய இப்போது அனுமதிப்பது ஊராட்சிகளுக்கும் பொருந்துவதாகும்.

## சட்டச் சிக்கல்கள்

15. அதிகாரங்களை ஊராட்சிகளுக்கு மாற்றப்படும் நேர்வில் இன்றியமையாப் பொருள்கள் சட்டமும், அதன் கீழ் வெளியிடப்பெற்ற பொருள் வாரியான அறிவிக்கைகளும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக ஒப்பந்த இனங்களின் குறிப்புத் தொகுதியும் சங்க அமைப்பு விதிகளும் இன்றியமையாப் பொருள்களைப் பகிர்ந்தளித்துச் செயலாட்சி செய்வதைத் தடை செய்யாது. கிராம ஊராட்சிகள் உரிய சில்லறை விற்பனை உரிமத்தை இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின் கீழ் பெறுதல் வேண்டும். மூன்று உரிமங்களை (அ) உணவு தானியங்கள் (ஆ) சர்க்கரை (இ) மண்ணெண்ணெய் ஆகியவற்றிற்கு, பெறுதல் வேண்டும்.

16. நியாய விலைக் கடைக்கான கண்காணிப்புக் குழுவை அமைப்பது தொடர்பில் **8–8–1995** ஆம் நாளிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் **289** (நிலை) எண்ணிட்ட அரசாணையைத் திருத்தியமைத்தல் வேண்டும். கண்காணிப்புக் குழுவின் செய்கடமைகள் அனைத்தையும் அரசாணையில் குறிப்பிடப் பெற்றவாறு கடையளவில் நடைமுறைப் படுத்த ஊராட்சிக்கு அரசு அதிகாரமளித்தல் வேண்டும். மாவட்ட அளவிலான நுகர்வோர் பாதுகாப்புக் குழு ஒன்றினை **5–11–96** ஆம் நாளிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் **616** (நிலை) எண்ணிட்ட அரசாணையில் அமைக்கப்பட்டுள்ள போதிலும், பொதுப் பகிர்வு முறையானது தடங்கலின்றி செயற்படுவதனை மறு ஆய்வு செய்வதற்கு ஊராட்சி ஒன்றிய, மாவட்ட அளவிலான குழுவினை அமைத்திட தனி அரசாணை வெளியிடுவது இன்றியமையாததாகும். ஊராட்சி ஒன்றிய, மாவட்ட அளவிலான அத்தகைய குழுவுக்குத் தொடர்புடைய தலைவர் தலைமை ஏற்கலாம். மாவட்ட ஊராட்சித் தலைவரை மாவட்ட அளவிலான நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் ஒரு உறுப்பினராக நியமிக்கலாம்.

17. **1986** ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் 7ஆவது பிரிவின் கீழ், மாவட்ட ஊராட்சிகளின் இரு தலைவர்களை மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழுவில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படலாம். மாவட்ட அளவில், மாவட்ட ஊராட்சியின் தலைவரை, மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுவில் ஒரு உறுப்பினராக எடுத்துக் கொள்ளலாம்.